பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 31 | திங்கட்கிழமை | 15.07.2024 | அதிர்வு 349

## இராஜாங்க அமைச்சர் இன்று வடக்கு விஜயம்

**4 அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நேரில் ஆராய**



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கும் 06




# பெரு வெற்றியுடன் சஜித் ஜனாதிபதியாவது உறுதி

## அடித்துக் கூறுகின்றார் இராதாகிருஷ்ணன்



(நுவரெலியா நிருபர்)

"ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. எனவே, தேர்தல் நடத்தப்படுவது உறுதி. அந்தத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ பெரும் வெற்றி பெற்று நாட்டின் ஜனாதிபதியாவார்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். 06

## பொன்சேகாவுக்கு வெட்டு! புதிய தவிசாளராக கபீர்!!

**ஐக்கிய மக்கள் சக்தி அதிரடி முடிவு**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் அக்கட்சியின் தவிசாளர் சரத் பொன்சேகா எம்.பிக்கும் இடையிலான முறுகல் நிலையின் உச்சக்கட்டமாக சரத் பொன்சேகாவை கட்சியின் தவிசாளர் 06




இலங்கைத் தமிழரசு கட்சியின் வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வரும் வெள்ளிக்கிழமை.

அடுத்தடுத்த தவணையுடன் வழக்கு முடியுமா? கட்சியின் தேசிய மாநாடு விரைந்து நடைபெறுமா?

அப்படிக் கேட்டால் என்னத்த கன்னையாவின் பாணியில் 'வரும்...ஆனா..வராது..!' என்றுதான் பதில் கூற வேண்டியிருக்கும். அப்படித்தான் நிலைமை உள்ளது.

இந்த வழக்கை விரைந்து முடிக்க சுமந்திரன் தரப்புத்தான் முட்டுக்கட்டை என்று முதலில் கூறி வந்தது சிறிதரன் தரப்பு. ஆனால் நிலைமை இப்போது மாறிவிட்டது போலும்.

அடுத்த இரண்டு தவணைகளுக்குள் வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதில் சுமந்திரன் தரப்பு தீர்க்கமாக 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# சீதையம்மன் ஆலயத்தில் பட்டாபிஷேகப் பெருவிழா

நுவரெலியா – சீதாஎலிய சீதையம்மன் ஆலய அருள் மிகு ஸ்ரீஇராமபிரான் – சீதாபிராட்டியாரின் தெய்வீகத் திருமணமும் பட்டாபிஷேகமும் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றன.

தெய்வீகத் திருமணத்தையும் பட்டாபிஷேகப் பெருவிழாவையும் முன்னிட்டு நேற்று காலை முதல் விசேட யாக பூஜைகளும் அபிஷேக பூஜைகளும் நடைபெற்றன.

சித்திரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப வேளையில் ஸ்ரீஇராம பிரானுக்கும் சீதாபிராட்டியாருக்கும் மங்கல வாத்தியங்கள் முழங்க பெருந்திரளான பக்தர்கள் சூழ தெய்வீகத் திருமணம் இனிதே நடைபெற்றது.

தொடர்ந்து ஸ்ரீஇராம பிரானுக்கு பட்டாபிஷேகப்பெருவிழா இடம்பெற்றது.




# ஜனாதிபதித் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

## நிதியமைச்சு அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் செலவினங்களுக்காக தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியை விடுவிக்க இயலுமென நிதியமைச்சின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் 17ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வருகைதருமாறு நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான நிதியை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.






# போக்குவரத்துச் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து மீண்டும் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

போக்குவரத்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து மீண்டும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தெருக்கள், பாலங்கள், மதகுகள் மற்றும் ரயில் பாதைகள் உட்பட பொதுப் போக்குவரத்துச் சேவை களுக்கான வசதிகளை வழங்குவதற்காக இந்த வர்த்த மானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



# ரூ. 1700 வழங்க மறுக்கும் கம்பனிகளே வெளியேறு!

## தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்

(எஸ்.சதீஸ்)

தமக்கான நாள் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,700 ரூபாவை வழங்குமாறு பெருந்தோட்டக் கம்பனி களை வலியுறுத்தி தலவாக்கலை, நானுஓயா தோட்டத் தொழிலாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வை வழங்க மறுக்கும் கம்பனிகள் தோட்டங்களைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் அவர்கள் இடித்துரைத்தனர்.

தாம் கடின உழைப்பை வழங்குகின்ற போதிலும் அதற் கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும், இந்த நிலைமை தொடரக் கூடாது எனவும் தொழிலாளர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவேண்டாம் என்று தோட்ட நிர்வாகம் அச்சுறுத்துகின்றது எனச் சுட்டிக்காட்டி, அதற்குத் தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட் டனர்.

# சிறுவர்களிடையே பரவும் சுவாசம் சார்ந்த நோய்கள்



சிறுவர்களிடையே ஆஸ்துமா உள்ளிட்ட சுவாசம் சார்ந்த நோய் நிலைமைகள் அதிகரித்து வருகின்றன என சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இருமல், சுவாசிப்பதில் சிரமம், இருமலுடன் வாந்தி வெளியேறல் போன்றன இந்த நோயின் அறிகுறிகளாகும்.

நாட்டின் பல பகுதிகளில் தற்போது பரவிவரும் இன்புளூவென்சா வைரஸ் காய்ச்சலின் பின்னரும் இவ்வாறாக சிறுவர்களுக்கு ஆஸ்துமா ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தூசி அதிகம் உள்ள வீடுகளிலும், புகைபிடிக்கும் பெரியவர்கள் வசிக்கும் வீடுகளிலும் உள்ள சிறுவர்களுக்கு இவ்வாறு ஆஸ்துமா நோய் ஏற்படும் அபாயம் அதிகமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த நிலைமை தொடர்பில் அச்சமடைய தேவையில்லை எனவும் முறையான சிகிச்சையின் மூலம் இதனைக் குணப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு மேலாக இருமல் நீடிக்குமாயின், வைத்தியரை நாடி சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சில நேரங்களில் இது சயரோகத்துக்கான அறிகுறிகளாகவும் காணப்படக்கூடும் எனவும் சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை முப்பதாயிரத்தையும் தாண்டியது



இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்துள்ளதாகத் தேசியத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரையான காலப்பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 30 ஆயித்து 57 ஆகும். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அது 6,910 ஆகும்.

அதேநேரம் 2024 ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், மேல் மாகாணத்தில் 11 ஆயிரத்து 661 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நாட்டில் ஜுலை மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,818 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வரும் நிலையில், டெங்கு நுளம்பு பெருகாத வகையில் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

# மேல் மாகாணத்தில் இன்று முதல் ஓட்டோக் கட்டணங்கள் குறையும்



மேல் மாகாணத்தில் இன்று முதல் ஆட்டோக்களின் பயணக் கட்டணங்கள் குறைக்கப்படவுள்ளன என அகில இலங்கை ஓட்டோச் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர இதனைக் குறிப்பிட்டார்.

அதற்கமைய இரண்டாவது கிலோ மீற்றருக்காக இதுவரை அறவிடப்பட்ட 100 ரூபா என்ற பயணக் கட்டணம் இன்று முதல் 90 ரூபாவாகக் குறைக்கப்படவுள்ளது.

# பலா செய்கையினை மேம்படுத்த தீர்மானம்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு பலா செய்கையை மேம்படுத்த விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய 7 வகையான பலா செய்கையை முன்னெடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், நாட்டில் பலாப்பழத்திற்கான கேள்வி அதிகரித்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.




Muhurtham Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
JULY
27
2024
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு சாத்தியங்களும் உண்டு.

கடைசியாக கிளிநொச்சியைச் சேர்ந்த கட்சி உறுப்பினர் ஜீவரராஜா என்பவர் வழக்கில் இடையீட்டு எதிராளியாகச் சேர விண்ணப்பித்துள்ளார். அவரது விண்ணப்பத்தில் சுட்டப்பட்ட விடயங்களை சுமந்திரன் சவாலுக்குட்படுத்தியிருக்கின்றார். அவர், சிறிதரனின் ஆதரவுத் தரப்பைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

இவரது இடையீட்டு மனுவில் உள்ள விடயங்களை சுமந்திரன் சவாலுக்கு உட்படுத்தியுள்ள நிலையில் அவர் – அதாவது சிறிதரனின் ஆதரவாளர் – அந்த இடையீட்டு மனுவை வற்புறுத்தினால், அதன் மீதான வாதங்கள், விசாரணைகள் முடிந்து நீதிமன்றம் ஒரு முடிவு கட்ட இன்னும் நான்கு, ஐந்து தவணைகளாவது வழக்கு இழுபடும்.

அது மாத்திரமல்ல. வழக்கையொட்டிய இணக்க ஏற்பாடு தொடர்பில் சுமந்திரன் – சிறிதரன் தரப்புகளிடையே முரண்பாடு நீடிப்பதாகவே தெரிகின்றது.

கட்சியின் மூலக்கிளையின் கூட்டங்கள் முடிந்து, பெரும்பாலான தொகுதி கிளைகளின் கூட்டங்களும் நடைபெற்று, பிரதிநிதிகள் தெரிவாகிவிட்டனர். தொகுதிக் கிளைகளை ஒருங்கிணைத்து, பொதுச் சபைக் கூட்டத்தை மீளக் கூட்ட வேண்டியதுதான் இனி செய்ய வேண்டிய நடவடிக்கை என்பது சுமந்திரன் தரப்பு பிரேரிக்கும் இணக்கத் திட்டத்தின் உள்ளடக்கம் எனத் தெரிகிறது.

ஆனால், இது விடயத்தில் மாறாக, ஒற்றைக் காலில் நிற்கின்றார் சிறிதரன் என்று கூறப்படுகிறது.

எல்லா மூலக் கிளைகளும் மீளக் கூட்டப்பட வேண்டும், புதிதாக தெரிவுகள் நடைபெற வேண்டும், பின்னர் மூலக் கிளைகள் சேர்ந்து தொகுதிக் கிளைகள் தெரிவு செய்யப்பட வேண்டும், அதன் பின்னர்தான் தேசிய மாநாட்டுக்கு முந்திய பொதுக்குழு கூட்டம் என்று நேற்று வவுனியாவில் நடைபெற்ற மேற்படி வழக்கின் எதிராளிகளின் கலந்தாலோசனைக் கூட்டத்தில் அடித்துக் கூறியிருக்கின்றார் சிறிதரன் என அறியவந்தது.

நல்லது. நல்ல திட்டம். வழக்கை விரைந்து முடித்தாலும், இந்தக் கூட்டங்களை மூலக்கிளைகளில் இருந்து நடத்தி முடிக்க இன்னும் ஓரிரு ஆண்டுகள் சென்றாலும் இயலாமல் போகும் நிலைமை ஏற்படலாம். மூலக்கிளைகளின் விவகாரமே வழக்குகளுக்கு மேல் வழக்குகளாகப் போய் இழுபடக்கூடிய ஆபத்து உண்டு.

கட்சித் தலைவரே தனது தொகுதி, மூலக்கிளைகளின் செயலாளருக்குத் தெரியாமல் அல்லது அவரை ஒதுக்கித் தன்பாட்டில் கூட்டம் நடத்தி முடித்து விட்டார். மீண்டும் ஆரம்பத்தில் இருந்து அப்படி நடத்த முற்பட்டால் நிச்சயம் அதுவே நீதிமன்றத்தில் இழுபடுவது உறுதி.

தலைவரின் மூலக்கிளையில் நிலைமை இதுவென்றால் மிகுதியை ஊகித்துக் கொள்ளுங்கள்.

இத்தகைய பின்புலத்தில் கூட்டங்களை மூலக்கிளையிலிருந்து நடத்துவது என்றால் முடிந்த மாதிரித்தான். அதை யோசிக்கும் போது எனக்கு தமிழ் சினிமா படத்தில் ரோபோ சங்கரின் ஒரு நகைச் சுவைக் காட்சிதான் நினைவுக்கு வந்தது.

அந்தப் படத்தில் எம்.எல்.ஏயான அவருக்கு எதையும் ஆரம்பத்திலிருந்து வரிசையாக – ஒழுங்கு முறையாக – கூறித்தான் பழக்கம். இடையில் யாராவது வழிமறித்து விட்டால், மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்குவார். அவரிடம் கதை கேட்பார்கள்.

“அன்னைக்குக் காலையில 6:00 மணி இருக்கும். கோழி கொக்கரக்கோ என்று கூவிச்சுது... என் பொண்டாட்டி குளிச்சுவிட்டு, தலை நிறைய பூ வச்சுக் கொண்டு என்னை வந்து உசுப்பினா......!” என்று ஒவ்வொரு தடவையும் ஆரம்பத்தில் இருந்து ரோபோ சங்கர் கூறுவார்.

பார்வையாளர்கள் வயிறு குலுங்கச் சிரித்துக் களைத்துப் போவார்கள்.

தமிழரசுக் கட்சியும் ஆரம்பத்தில் மூலக்கிளையிலிருந்து மீளவும் கூட்டங்களைத்தொடங்கி,வழக்குகளைச்சந்தித்து, தேசிய மாநாடு வரை முன்னேறுவது என்றால் ரோபோ சங்கரிடம் கதை கேட்ட மாதிரித்தானாகும் என்று நான் நினைக்கிறேன்.

நேற்றும் வழக்கின் எதிராளிகளின் வவுனியா கூட்டத்திலும் சிறு சிறு குழுப் பங்கள் இருந்தன எனத் தெரிகின்றது. வாய்க்கும் மூளைக்கும் தொடர்பில்லாமல் கதை பேசுபவரின் கருத்தைக் கணக்கில் எடுக்காமல் கூட்டத்தை நடத்தி முடிக்க வேண்டிய இக்கட்டு கூட்டத்தில் பங்கு பற்றியோருக்கு என்றும் அறிய வந்தது.

அப்படி ஒரு நிலைமையில் கட்சியை நீடிக்க விடத் தரப்புக்கள் திடீரென விரும்புவதின் சூத்திரம் – பின்னணி – என்ன? முடியுமானால் நாளை பார்ப்போம்.

## பெரு வெற்றியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பதுளையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன், பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். ராஜாராம், மலையகத் தொழிலாளர் முன்னணியின் செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், பதுளை மாவட்ட அமைப்பாளர் பகீர் பாலச்சந்திரன் ஆகியோரும் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:–

“ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தலை விடுப்பதற்குரிய அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிட்டுவதற்கு இன்னும் ஓரிரு நாட்களே உள்ளன. இந்நிலையில், தேர்தலைப் பிற்போடுவதற்குச் சிலர் நீதிமன்றத்தை நாடுகின்றனர். 5 ஆண்டுகளா, 6 ஆண்டுகளா எனக் கோரி ஒருவர் நீதிமன்றத்தை நாடினார். அந்த மனு நிராகரிக்கப்பட்டது. 19 ஆவது திருத்தச் சட்டம் முறையாக நிறைவேற்றப்படவில்லை எனக் கூறி மற்றுமொருவர் நீதிமன்றத்தை நாடியுள்ளார். உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலுடன்தான் 19 நிறைவேற்றப்பட்டது. எனவே, இந்த விடயத்தில் சிக்கல் வராது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது உறுதி. ஜனாதிபதித் தேர்தலுக்கென வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, நிதி இல்லை எனக் காரணம் கூறவும் முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாமல் ஆக்கி தனி ஒருவராக நாடாளுமன்றம் வந்து, ஜனாதிபதியாகத் தெரிவானமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திறமை. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் எந்த அணியில் போட்டியிடுவது என அவர் குழம்பியுள்ளார். ஏனெனில் மக்கள் ஆணை அவருக்கு இல்லை.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி தனிக் கட்சியை உருவாக்கி எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ பதவி வகிக்கின்றார். அவருக்கான வெற்றி வாய்ப்பே அதிகம். எனவே, தற்போதைய சூழ்நிலையில் சஜித் பக்கம் இருந்து சிலர் ஜனாதிபதியுடன் இணையவுள்ளனர் எனக் கூறப்படுவதெல்லாம் சாத்தியமற்ற விடயமாகும்.” – என்றார்.

## இராஜாங்க அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நான்கு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

யாழில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெறும் மூன்று மாவட்டங்களுக்கான கலந்துரையாடலில்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரு திட்டங்களும், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தலா ஒரு திட்டமும் முன்னெடுப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளதன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பகுதியில் 980 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு திட்டம் குறித்தும், கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் பகுதியில் 170 ஏக்கர் நிலப் பரப்பில் மற்றொரு திட்டம் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளன. அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காங்கேசன்துறை கடற்கரைப் பூங்கா மற்றும் காங்கேசன்துறை விசேட முதலீட்டு வலயம் என்பன தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

## பொன்சேகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பதவியில் இருந்து நீக்கி கபீர் ஹாசீம் எம்.பியை அப்பதவிக்கு நியமிப்பதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

மேலும், சரத் பொன்சேகா எம்.பி. வகித்து வரும் களனி தொகுதி அமைப்பாளர் பதவிக்கு நாலக கொடஹேவா எம்.பியை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் சகல பதவிகளில் இருந்தும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. நீக்கப்படுகின்றார் என்றும் அறியமுடிகின்றது.

கட்சி தலைமை மீதான விமர்சனம், கட்சி தீர்மானத்துக்கு எதிரான செயற்பாடுகள், ஆளுங்கட்சியுடனான உறவு உள்ளிட்ட காரணங்களைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்படுகின்றது என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து எதிர்வரும் 21 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தின்போது ரணிலுடன் பொன்சேகா மேடையேறவுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.





# இலங்கையை அழித்த ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தது ஜே.வி.பியே!

## களுத்துறை மக்கள் அரண் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வர வாக்குத் திரட்டும் திட்டத்தை ஜே.வி.பி. தரப்பினரே முன்னெடுத்தனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் அரண் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு வீடு வீடாகச் சென்று அடிமட்ட பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தது ஜே.வி.பி. தரப்பினரே. அவர்கள் ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு டீல் போட்டு வீடு வீடாகச் சென்று சுவரொட்டிகளை ஒட்டினர். இவர்களைப் போன்று திருடர்களுடன் எனக்கு எந்த டீலும் இல்லை.

மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வர கிராமத்தில் வீடு வீடாகச் சென்று வாக்குத் திரட்டும் திட்டத்தைக் இந்த மக்கள் விடுதலை முன்னனணியினரே முன்னெடுத்தனர்.

நாட்டை அழித்த திருடர்களை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக மக்கள் விடுதலை முன்னனணியினர் செயற்பட்டாலும், அந்தத் திருடர்களுடன் இணைந்து பதவிகளை ஏற்றுக்கொள்ள நான் ஒருபோதும் விரும்பவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு நாட்டுக்கும் நகைச்சுவைகளை முன்வைத்து வருகின்றார். புண்ணியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியான ஒருவர், தேர்தலுக்குப் பயந்து தேர்தலை நடத்தாமல் அதிகாரத்தில் இருந்து கொள்வதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றார். இவ்வாறான ஒருவரை நான் எனது வாழ்க்கையில் பார்த்ததில்லை. போட வேண்டிய ஒவ்வொரு முடிச்சுக்களையும் அவர் போடுகின்றார். சிறப்புரிமைகளை வைத்து பயனடைய நினைக்கின்றார். சலுகைகள், வரப்பிர சதாசங்களை வழங்கி கட்சித் தலைவர்களை வளைத்துப் போடும் வேலையிலும் அவர் இறங்கியிருக்கின்றார்.

கட்சித் தலைவர்களும் பிச்சையெடுத்து பிழைக்கும் நடவடிக்கைளையும் முன்னெடுத்துள்ளனர். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு தமது கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் வெட்கமற்ற, கீழ்த்தரமான, கேவலமான அரசியல் கலாசாரத்துக்கும், அவ்வாறான அரசியலை முன்னெடுப்பவர்களையும் நிறுத்துகின்ற இந்தப் பேராசை அரசியலையும் முடிவுக்குக் கொண்டு வரும் காலம் நெருங்கி விட்டது.

ஜனாதிபதியும் அரச தரப்பினரும் தேர்தலைக் கண்டு அஞ்சமடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியால் ஐக்கிய தேசியக் கட்சி பூச்சியத்துக்கு வீழ்ந்ததுடன், புண்ணியத்தால் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதற்குக் கூட பல மாதங்கள் பிடித்தன.

மூலோபாய ரீதியாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் இருப்பைப் பாதுகாக்கும் விதமாகவே இவ்வளவு காலமும் செயற்பட்டு வந்துள்ளனர். இத்தகைய சுயநல போக்குகளை விடுத்து, மக்களின் யுகத்தை உருவாக்கி, சாரதாண மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் அரசொன்றே தற்போது நாட்டுக்கு அவசியம்.” – என்றார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொலிஸ், சிறைச் சீத்துவங்கள்

இலங்கையின் சட்டம் - ஒழுங்கு அமுலாக்கல் துறையான பொலிஸ் மற்றும் சிறைத் துறையின் சீத்துவம் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறது.

போதை வஸ்துக் கடத்தல் கும்பல்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள் போன்ற தரப்புகளை மடக்குதல், பாதாள உலக கும்பல்களை அடக்குதல் போன்றவை தொடர்பான முன்னறிவிப்புக்களுடன் பெரும் ஆரவாரமாக ஆரம்பிக்கப்பட்ட 'யுக்திய' நடவடிக்கை இன்னும் ஓரிரு மாதங்களில் ஓராண்டை எட்டப் போகின்றது.

இந்த நடவடிக்கை மூலம் போத வஸ்து கடத்தல்கள், வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் பாதாள உலகம் குழுக்களின் கட்டமைப்புகளையே தகர்த்துள்ளோம், முதுகுத்தண்டை உடைத்துள்ளோம் என்றெல்லாம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் போன்றோர் பீற்றிக்கொண்டிருந்தனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் போய் ஒளிந்து கொண்டு, அங்கிருந்தபடியே பாதாள உலகக் குழுக்களை இயக்கிய தரப்புகளையும் தேடிச் சென்று மடக்குகிறோம் என்றும் கூட பிரபலாபித்துக் கொண்டார்கள்.

ஆனால் அவர்களின் பொலிஸ் துறை, சிறை துறை போன்றவற்றின் பிரதான கட்டமைப்பு மற்றும் சீத்துவம் ஆகியன இப்போது அம்பலமாகி உள்ளன.

கைதாகி சிறையில் இருந்து கொண்டே இந்தப் பாதாள உலகம் குழுக்களின் தலைவர்கள் தொடர்ந்து அக்குழுக்களை கனகச்சிதமாக இயக்கி வந்தமை அம்பலத்துக்கு வந்திருக்கின்றது. பாதுகாப்பு தரப்பினரே அவற்றைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் கேவல நிலைமை தான் இப்போது உள்ளது.

பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கணேமுல்லே சஞ்சீவ, பொடி லஸ்ஸி, வெலே சுதா மற்றும் குடு சலிந்து ஆகியோர் பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அவர்களின் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கண்டறிந்துள்ளனர்.

இந்தப் பாதாள உலகக் குற்றவாளிகளிடம் இருந்து ஆறு அதி நவீன கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்ட போதே இந்தத் தகவல் வெளியாகியுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

கணேமுல்ல சஞ்சீவ மற்றும் குடு சலிந்து ஆகியோர் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் பாதாள உலக நடவடிக்கையிலோ அல்லது போதைப்பொருள் கடத்தலிலோ சம்பந்தபடவில்லை எனப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஆனால், அவர்கள் சிறைவாசத்தின் பின்னர் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி பாதாள உலகக் கும்பல் மற்றும் போதைப்பொருள் வலையமைப்புகளுடன் இணைந்து செயற்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் பூஸா சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

அங்கு சிறைச்சாலையில் பலத்த பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த குடு சலிந்து மற்றும் வெலே சுதா ஆகியோரிடம் நான்கு ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர், பூஸா சிறைச்சாலைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கணேமுல்ல சஞ்சீவ மற்றும் பொடிலேசி ஆகியோரிடம் இரு ஸ்மார்ட் போன்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இரு சிறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 6 கையடக்கத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டன எனச் சிறைச்சாலை ஆணையாளரின் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க சிங்கள ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு இந்த கையடக்கத் தொலைபேசிகள் எவ்வாறு கிடைத்தன என்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இநற்கிடையில் -

வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேரா என்ற கிளப் வசந்தாவின் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ள பச்சை குத்தும் நிலைய உரிமையாளரிடம் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொண்டமை தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பொலிஸ் அதிகாரிகளை எச்சரித்துள்ளார் என்ற செய்தி வெளியாகியிருக்கின்றது.

இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் மேல் மாகாணம் தெற்கு பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கயந்த மாரப்பன ஆகியோரை அவர் எச்சரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவையெல்லாம் பாதாள உலகம் குழுவினர், போதை வஸ்து கும்பல்கள் போன்ற சர்வதேச தொடர்புகளை வைத்துள்ள கிரிமினல் கும்பல்களை உரிய முறையில் கையாளும் நிபுணத்துவமும் கட்டமைப்பும் தரமும் இலங்கை பொலிஸ் மற்றும் சிறைத் துறைகளிடம் இல்லை என்பதை அம்பலப்படுத்தும் விடயங்கள்தான்.





# ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு; பிரதமர் மோடி கடும் கண்டனம்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு பிரதமர் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில்,

"எனது நண்பரும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்ப் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையடைந்தேன்.

இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறேன்.

அரசியலிலும் ஜனநாயகத்திலும் வன்முறைக்கு இடமில்லை. அவர் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்துக்கு தினமும் 8,000 கனஅடி தண்ணீர் கர்நாடக முதல்வர் சித்தராமையா அறிவித்தார்



தமிழகத்துக்கு தினமும் 8,000 கனஅடி காவிரி தண்ணீர் திறக்க உள்ளோம் என கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, டில்லியில் கடந்த 11 ஆம் திகதி நடந்த காவிரி ஒழுங்காற்று குழு கூட்டத்தில், "தமிழகத்துக்கு கர்நாடக அரசு 1 டி.எம்.சி. காவிரி நீரை ஜுலை 31 ஆம் திகதிக்குள் திறந்துவிட வேண்டும். தினமும் வினாடிக்கு 11,500 கன அடி நீர் பிலிகுண்டுலு சோதனை நிலையத்தில் செல்வதை உறுதி செய்ய வேண்டும்" என பரிந்துரை செய்யப்பட்டது.

இதையடுத்து கர்நாடக முதல்வர் சித்தராமையா அவசரமாக அமைச்சரவையை கூட்டி, தமிழகத்துக்கு நீரை திறந்துவிட முடியாது என தெரிவித்தார்.

மேலும் காவிரி ஒழுங்காற்று குழுவின் முடிவை எதிர்த்து, காவிரி மேலாண்மை ஆணையத்தில் முறையிடப் போகின்றோம் என்றும் தெரிவித்தார்.

இதன் அடுத்தகட்டமாக, காவிரி நீரை திறந்துவிடுவது குறித்து முடிவெடுப்பதற்காக சித்தராமையா தலைமையில் அம்மாநில அனைத்துக்கட்சி தலைவர்களின் கூட்டம் பெங்களூரில் நேற்று நடந்தது. துணை முதல்வரும் நீர் பாசனத்துறை அமைச்சருமான டி.கே.சிவகுமார், பா.ஜ.க, ம.ஜ.த, கர்நாடக மாநில விவசாய சங்கம், கன்னட அமைப்பினர், கர்நாடகாவை சேர்ந்த மத்திய அமைச்சர்கள், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியை சேர்ந்த எம்.பி., எம்.எல்.ஏக்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தமிழகத்துக்கு நீர் திறக்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.எனினும்,கூட்டத்தின் இறுதியில்,ஒழுங்காற்றுகுழுபரிந்துரையின்படி, தமிழகத்துக்கு 1 டி.எம்.சி. நீரை திறந்து விடுவதுக்கு பதிலாக, தினமும் 8,000 கனஅடி காவிரி நீர் திறக்க உள்ளதாக கர்நாடக முதல்வர் சித்தராமையா அறிவித்தார்.

இதனையடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த சித்தராமையா, "தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு தமிழகத்துக்கு 8,000 கனஅடி தண்ணீர் திறந்து விடலாம் என்றும், மழை பெய்தால் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வோம் என்றும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது." –என்றார்.

மேலும், தமிழகத்துக்கு இன்று முதல் 8,000 கன அடி காவிரி நீர் திறக்கப்படும் என கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்தார்.



# எதற்கும் பயப்படமாட்டோம்: டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு

தனது இரண்டாவது பொதுக்கூட்டத்தில் நடந்த சம்பவம் தொடர்பில் தனது ஆதரவாளர்களின் எண்ணங்கள் மற்றும் பிரார்த்தனைகளுக்கு டொனால்ட் ட்ரம்ப் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"நினைக்க முடியாததை நடக்கவிடாமல் தடுத்தவர் கடவுள் மட்டுமே. நாங்கள் எதற்கும் பயப்பட மாட்டோம், மாறாக எங்கள் நம்பிக்கையில் நிலைத்திருப்போம், தீய செயல்களை எதிர்கொள்வோம்.

காயமடைந்தவர்கள் குணமடைய நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம், மிகவும் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட குடிமகனின் நினைவை எங்கள் இதயங்களில் வைத்துள்ளோம்.

நாங்கள் ஒன்றிணைந்து நிற்பது முன்னெப்போதையும் விட இப்போது முக்கியமானது. நான் உண்மையிலேயே எங்கள் நாட்டை நேசிக்கிறேன், உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன்.

இந்த வாரம் விஸ்கான்சினில் இருந்து எங்கள் பெரிய தேசத்துடன் பேச ஆவலுடன் காத்திருக்கிறேன்."– என்று குறிப்பிட்டுள்ளார்.

# ட்ரம்ப் மீதான துப்பாக்கிப் பிரயோகத்துக்கு எலோன் மஸ்க் கண்டனம் வெளியிட்டார்





அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமைக்கு உலகின் பெரும் பணக்காரரும் எக்ஸ் நிறுவன தலைவருமான எலோன் மஸ்க் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவருடைய எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்ட பதிவிலேயே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"டொனால்ட் ட்ரம்பிற்கு எனது முழு ஆதரவை அளிக்கிறேன். அவர் உடனடியாக உடல் நலம் தேற வேண்டும்.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்று உளவுத்துறையின் தலைவரும், இந்த கூட்டத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டவரும் பதவி விலக வேண்டும்." – என்று தெரிவித்துள்ளார்.



# நேபாளத்தில் புதிய அரசு இன்று பதவியேற்கின்றது



நேபாளத்தில் புதிய அரசு இன்று பதவியேற்கவுள்ளதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி நேற்று ஜனாதிபதி ராம் சந்திர பவுடலால் நியமிக்கப்பட்டார்.

அதன்படி, இன்று காலை புதிய பிரதமரும், அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் புஷ்பகமல் தாஹல் என்ற பிரசந்தா தலைமையிலான கூட்டணி ஆட்சி நடந்து வந்தது.

இந்த நிலையில், வரவு – செலவுத் திட்டம் தொடர்பான கருத்து வேறுபாடு காரணமாக ஆட்சியில் அங்கம் வகித்து வந்த முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான நேபாள கம்யூனிஸ்டு கட்சி ஆதரவை திரும்ப பெற்றது.

இதனால், பெரும்பான்மையை இழந்த பிரதமர் பிரசந்தா, கடந்த வெள்ளிக்கு கிழமை நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தினார்.

இதில் பெரும்பான்மை பெற முடியாது பிரசந்தா அரசு தோல்வியடைந்தது.

இதைத்தொடர்ந்து நேபாளி காங்கிரஸ் கட்சியும், நேபாள கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்து புதிய கூட்டணி அரசை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்தன.

பின்னர், புதிய அரசை அமைக்க ஜனாதிபதியிடம் கே.பி. சர்மா ஒலி உரிமை கோரினார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை ஜனாதிபதி ராம் சந்திர பவுடல் ஏற்றுக்கொண்டமையையடுத்து, நாட்டின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி நேற்று நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.





# ரணிலுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயேதான் தாங்கள் என திருச்சியில் ஹக்கிம் தெரிவிப்பு

**(திருச்சியிலிருந்து எம். கே. ஷாகுல் ஹமீது)**

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே நாங்கள் உள்ளோம். ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என திருச்சி விமான நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள உயர் கல்விக் கல்லூரியொன்றின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து விமானம் மூலமாக ஞாயிறு காலை 11.30 மணி அளவில் அவர் திருச்சி விமான நிலையத்திற்கு வந்தடைந்தார். அவரை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் மாநில எம். எஸ். எவ். தலைவர் அன்சார் அலி மற்றும் முக்கியஸ்தர்கள் வரவேற்றனர்.

பின்னர் திருச்சி விமான நிலையத்தில் ரவூப் ஹக்கீம் செய்தியாளர்களிடம் கூறுகையில் –

பாபநாசம் ஆர்.டி.பி. தாவூத் பாட்ஷா கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் அதிதியாகக் கலந்து கொள்வதற்காக அழைப்பையேற்று நான் தமிழ்நாடு வந்திருக்கிறேன். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் நாளை குற்றாலம் சென்று விட்டு, நாளை மறுநாள் சென்னை செல்லவுள்ளேன்.

அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில துணைத் தலைவர் நவாஸ் கனி உட்பட சிலரை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் பயணத் திட்டத்தில் உள்ளடக்கியே மரியாதை நிமித்தமான பயணமாக நான் இதனை அமைத்துக் கொண்டுள்ளேன்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கப்பல் போக்குவரத்து தொடங்க ஏதும் பிரச்சினை இல்லை. மத்திய அரசும் தமிழக அரசும் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர், காலநிலை காரணமாக தனியார் கப்பல் நிறுவனத்தின் தரப்பில் தாமதம்

தொடர்ச்சி ▼





# ரணிலுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயேதான் தாங்கள் என திருச்சியில் ஹக்கிம் தெரிவிப்பு

தொடர்ச்சி ▲

ஏற்பட்டுள்ளது . மீண்டும் அதனை தொடங்குவதற்கான ஆர்வம் காட்டப் படுகின்றது. அதேநேரம் கப்பலின் தொழில்நுட்ப காரணம் தான் கப்பல் சேவை தொடங்குவதற்கு தாமதம் எனவும் எங்களுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியா – இலங்கை இடையே தரைவழியான சேவை தொடங்குவ தற்கு முன்னர் ராமர் பாலத்தில் வழியே அந்த சேவையைத் தொடங்க பல குறுக்கீடுகள் உள்ளன. இந்தியா – இலங்கை இருதரப்பினருக்கும் இடையே ஆர்வம் இருந்தாலும் இலங்கை பொருளாதார நெருக் கடியில் இருந்து சற்று மீண்டுவரும் இச்சமயத்தில் இலங்கைஅரசு இதில் தாமதம் காட்டிவருகிறது. ஆனால் இந்திய அரசு இதில் முனைப்புக் காட்டி வருகிறது.

மேலும் இலங்கையில் குழாய் வழியே இலங்கைக்கு எண்ணெய் கொண்டுசெல்வதற்கும், காற்றாலை மூலம் மின்சார உற்பத்தி தொடங்குவ தற்கு முதலீடு செய்யப்பட்டு ஒப்பந் தங்களும் முடிவாகியுள்ளன.

இலங்கையில் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசாங்கத் திற்கு எதிரான நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம். ஜனாதிபதி தேர்தலுக் கான அறிவிப்பு விரைவில் அறிவிக் கப்பட்டதும் எங்களது முடிவு என்ன என்பதை நாம் ஒன்றாகக் கூடி கலந்தா லோசித்து அறிவிப்போம்.

தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்கள் இடையிலா ன பிரச்சினை என்பது தடை செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு மீன்பிடிப்பது தொடர்பிலும் ஏற்பட்டுள்ளது. இதனால் மீன்களின் இனப்பெருக்கம் குறை கிறது. மேலும் கடலுக்கு அடியில் உள்ள வளங்களை சுரண்டி எடுத்துக்கொண்டு செல்வதால்தான் தமிழக மீனவர்கள் மற்றும் இலங்கை மீனவர்கள் இருதரப்பினரிடையேயான பிரச்சினை. இதற்கு, சுமுகமான பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

மேலும் இலங்கை மற்றும் இந் திய மீனவர்கள் இடையே பேசி தீர்த் துக்கொள்ள வேண்டிய விஷயம் இது. அதேபோன்று கச்சத்தீவு விவகாரத் திலும் ஒரு கருத்து ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும் என்பதுவே எங்களது நிலைப்பாடு.

தமிழக மக்களின் குரலாக எதிர்க் கட்சிகள் நாங்கள் இருக்கிறோம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடி வாழ்வாதாரத்திற்கு ஆட்சி அதிகாரத் தில் இல்லாதபட்சத்திலும் மக்கள் நன்மைக்காக பல விஷயங்களை செய்கிறோம். மேலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தமிழக மக்களுக்காக நாங்கள் ஆட்சிக்கு வரும்போது பல செயல்திட்டங்களைச் செய்யக் காத் திருக்கின்றோம். மேலும் ஒரிலட்சம் வீட்டுதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு இந்திய அரசு மிகப்பெரிய பங்களிப் பைச் செய்துள்ளது.

போருக்கு பின்னரான இலங்கை யில் வளர்ச்சி ஏற்பட்டாலும் கடன் சுமை காரணமாக உலக நாடுகளுக்கு அதனை திருப்பி செலுத்த முடியாத நிலையிருக்கத்தக்கதாக, இந்திய மத் திய அரசு 4,000 மில்லியன் அமெ ரிக்க டொலருக்கு மேல் இலங்கைக்கு பெட்ரோல் டீசல் மற்றும் காஸ் போன்ற பல்வேறு வகையான உதவிகளை அளித்ததன்பேரில் தற்போது கடன் சுமையிலிருந்து ஓரளவு மீண்டுவரு கின்றோம். அதற்கு இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

யுத்த காலத்தில் காணாமல் போன வர்கள் மற்றும் காணாமல் ஆக்கப் பட்டவர்கள் தொடர்பில் மனித உரிமை கள் பேரவையில் இலங்கைக்கு எதி ரான சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. இதனால் இலங்கை மீது சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் ஏற்பட்டதன் காரணமாக, புதிய சட்ட மூலங்களை நிறைவேற்றி யிருக் கிறார்கள். உள்ளூர் நீதிமன்ற நடவ டிக்கைகள் மூலம் காணாமல் போன வர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர் களைக் கண்டுபிடிப்பது உட்பட பாதிப்பு களுக்கானவர்கள் விஷயத்தில் பல பரிகாரங்களை செய்வதற்காக ஒரு சர்வதேசக் கடப்பாடு இலங்கையின் மீது இருக்கின்றது. அதை நிறைவேற் றும் செயல்திட்டங்களில் இலங்கையின் தற்போதைய அரசு போதிய கரிசனை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எங்களது தரப்பு வெற்றி பெறுமேயா னால், நிச்சயமாக இதில் கூடிய கரிச னையை நாங்கள் காண்பிப்போம். அதற்கான உத்தரவாதங்களை தமிழ் மக்களுக்கு நாங்கள் ஏற்கனவே கொடுத்திருக்கிறோம்.

உலகிலேயே மிகப்பெரிய ஜன நாயக நாடு இந்தியா. ஆக கூடுதல் மக்கள் வாக்களிக்கும் தேர்தல் இந் திய நாடாளுமன்றத் தேர்தல். அந்த வகையில், யார் ஆட்சிக்கு வந்தார் என்பதை விடவும், பாரிய அசம்பாவி தங்கள் நிகழாமல் இந்திய ஜனநாயகம் வெற்றியடைந்திருக்கிறது என்பதைத் தான் இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

மூன்றாவது முறையாக மோடி அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார் என்பது ஒரு புறம் இருந்தாலும், எதிர்க் கட்சிகள் பலமான நிலையில் இருக் கின்றன என்பது ஜனநாயகத்திற்கு உகந்த விஷயம். அந்த வகையில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் போதிய ஆசனங் களையும் கைப்பற்றி மிகப்பெரிய வெற்றியைப் பெற்று இருக்கின்றன என்பது ஒரு மிகப்பெரிய சாதனை என்றே நாங்கள் கருதுகிறோம். எனவே ஆளுங்கட்சியினர், எதிர்க்கட்சியினர் அனைவருக்கும் எங்களது மன மார்ந்த வாழ்த்துக்கள். – இவ்வாறு அவர் கூறினார்.




# மட்டு. - கல்முனை பிரதான வீதி புதுகுடியிருப்பில் பவுஸர் விபத்து!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புதுக் குடியிருப்புப் பகுதியில் எரிபொருள் ஏற்றிச் செல்லும் வாகனம் மின்சாரக் கம்பத்துடன் மோதியதால் அதிகாலையில் மின்சாரத் தடை ஏற்பட்டதுடன், தொலைபேசிச் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

மின் கம்பிகள் சேதமடைந்ததன் காரணமாக கல்முனை பிரதான வீதியில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டன.

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக் குடியிருப்புப் பகுதியில் கண்ணகி அம்மன் ஆலயத் தருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கல்முனையில் இருந்து கொழும்பு நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் அந்த வாகனம் பஸ் தரிப்பிடத்தில் மோதி, அதன் பின்பு வீதி ஓரத்தில் நின்ற மின்சார சபைக்குச் சொந்தமான தூண்களில் மோதி, அதன் பின் தொலைத் தொடர்பு கம்பத்திலும் மோதிய பின்னர் அருகில் இருந்த வீட்டு சுவர் ஒன்றில் மோதி நின்றுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கம் காரணமாக இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் காத்தான்குடிப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்துக்குள்ளான வாகனத்தின் முன்பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் வாகனத்தின் உதவியாளர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்க ப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

# ‘நாய்ப்பட்டிமுனை’ என்ற பெயர் ‘நற்பிட்டிமுனை’ என மாற்றம்!

(சம்மாந்துறையிலிருந்து தில்சாத் பர்வீஸ்)




அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவில் கல்முனை பிரதான அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நாய்பட்டிமுனை உப அஞ்சல் அலுவலகம் 2024.04.02 அன்று தொடக்கம் நற்பிட்டிமுனை உப தபாற் கந்தோர் என்று பெயராக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலின் ஊடாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அஞ்சல் அலுவலக உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு நற்பிட்டிமுனை அனைத்து பள்ளிவாசல் தலைவர் ஜெ.எம் றிஸான் (ஹாமி) உட்பட நிர்வாகிகள் கொண்டு வந்ததை தொடர்ந்து 2024.05.31 திகதி வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக குறித்த பெயர் மாற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி குறித்த உப தபாற் கந்தோரின் பழைய விளம்பர பலகை அஞ்சல் மா அதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ. எம்.ஆர்.பி.சத்குமாரவின் உத்தரவிற்கமைய அகற்றப்பட்டு புதிய விளம்ரப் பலகை தற்போது பொருத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இனிவரும் காலங்களில் நற்பிட்டிமுனை உப தபாற் கந்தோர் என அது அழைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்த நற்பிட்டிமுனை அனைத்து பள்ளிவாசல் தலைவர் உட்பட பலருக்கும் நற்பிட்டிமுனை பொதுமக்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.



# ஓட்டோவை பின்னால் மோதிவிட்டு தப்பிச் சென்ற கார்; இருவர் காயம்

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தன்னாமுனைப் பகுதியில் நேற்று ஓட்டோ விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை – செம்மண்ணோடை பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஓட்டோவில் மட்டக்களப்பு நோக்கி தன்னாமுனை பகுதியால் செல்லும் போது பின்னால் வந்த கார் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இவ் விபத்தில் ஓட்டோவில் பயணித்த இரு இளைஞர்களும் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் ஓட்டோவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மட்டக்களப்பில் மீண்டும் மொட்டுக்கட்சியினரின் மாவட்டத் தலைமைச் செயலகம் நேற்றுத் திறப்பு

## 'அறகலய' நெருக்கடியின் போது மூடப்பட்டது





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புதிய காரியாலயம் மீண்டும் திருகோணமலை வீதி தாண்டவன்வெளியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாவட்ட அமைப்பாளர் பா.சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கட்டகொட ஆகியோரால் சம்பிரயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மாவட்ட ரீதியாக ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சியின் காரியாலயங்கள் நேற்றும் முன்தினமும் திறந்து வைக்கப்படும் நிலையில் மட்டக்களப்பிற்கான பிரதான காரியாலயம் திருகோணமலை வீதியிலுள்ள தாண்டவன்வெளி பகுதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கட்சியின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பா.சந்திரகுமார் தலைமையில் இருதயபுரத்தில் இயங்கிவந்த மாவட்ட பொதுஜன பெரமுனை காரியாலயம் கடந்த அறகலய போராட்டத்தை அசுத்துத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கதிர்காமப் பாதயாத்திரைக்காக இவ்வருடம் 32 ஆயிரம் பேர் காட்டுப் பாதையில் பயணம்







(வடிவேல் டினேஸ்)

கதிர்காம பாதயாத்திரைக்காக இவ் வருடம் திறக்கப்பட்ட உகந்தை காட்டுவழி பாதை கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பூட்டப்பட்டது.

காட்டு பாதை வழியாக இவ் வருடம் சுமார் 31,986 பேர் வரையில் பாதயாத்திரை மேற்கெண்டுள்ளனர் என அம்பாறை லாகுகல பிரதேச செயலாளர் நவேந்திரராஜா நவநீதராஜா குறிப்பிட்டார்.

இந்தப் பாதை குமண, யால போன்ற தேசிய பூங்காக்களை ஊடறுத்துச் செல்கின்றது.

கடந்த வருடம் 27,109பேர் பாதயாத்திரை மேற்கொண்ட நிலையில் இவ்வருடம் அதிகமான பக்தர்கள் இதில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதை திறப்பு திகதி தொடர்பில் ஆரம்பத்தில் சர்ச்சைகள் இடம் பெற்றிருந்தாலும் இதன் பின்னர் கிழக்கு ஆளுனர் செந்தில் தொண்டமானின் தலையீட்டினால் பாதை 2024.06.30 அன்று காலை 6 மணிக்கு திறக்கப்பட்டது.

தொடர்ந்து 12 நாள்கள் காட்டு பாதை திறக்கப்பட்டிருந்தது. இந்த நாள்களில் பாதயாத்திரை சென்ற மக்களுக்கு சேவற்கொடியேன், வலம்புரியோன், சைவநெறிக் கூடம், சிவதொண்டர், அபிவிருத்திக்கான சமூக முயற்சியாளர்களின் ஒன்றியம் போன்ற தன்னார்வ தொண்டு அமைப்புக்கள் பாதுகாப்பு மற்றும் குடிதண்ணீர் சேவையை ஒழுங்கமைந்த ரீதியில் வழங்கியிருந்தன.

கடந்த வருடம் பாதயாத்திரை மேற்கொண்ட ஆண் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்த நிலையில் ஒரு பெண்ணும் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியிருந்தது. இந் நிலையில் இவ் வருடம் எதுவாக உயிர் சேதங்களும் காட்டு வழியாகப் பயணித்த நபர்களுக்கு இடம் பெறவில்லை. கதிர்காம தலத்தில் மாணிக்க கங்கையில் நீராடிய நபர் முதலைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# மட்டு. கூளாவடியில் இரத்ததான முகாம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கூளாவடி புனித வின்சென்ட் டீ பவுல் சபை "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம" எனும் தொனிப் பொருளில் இரத்ததான முகாமொன்றை நேற்று ஞாயிற்றுக் கிழமை முன்னெடுத்தது.

மட்டக்களப்பு கூளாவடி புனித வின்சென்ட் டீ பவுல் சபையின் 4 ஆவது ஆண்டு நிறைவுப் பூர்த்தியை முன்னிட்டு கூளாவடி புனித வின்சென்ட் டீ பவுல் சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற இரத்தப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுடன் இணைந்து போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய இரத்த தான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கூளாவடி புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி அலெக்ஸ் றொபெட் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில், மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவு வைத்தியர் ரேஜெல் டீ சில்வா, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.எம்.எம்.பைசால், வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், கூளாவடி புனித வின்சென்ட் டீ பவுல் சபை உறுப்பினர்கள், குருதிக் கொடையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



















# மக்கள் பெருமையுடன் முன்னோக்கி செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதுதான் உண்மையான புரட்சி!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"மக்களைக் கொல்வதோ வீடுகளை எரிப்பதோ உண்மையான புரட்சி கிடையாது. மாறாக நாட்டில் மக்கள் பெருமையுடன் முன்னோக்கிச் செல்லக் கூடிய சூழலை உருவாக்குவதே உண்மையான புரட்சி."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தம்புத்தேகம மகாவலி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மகாவலி எச். மற்றும் /ஹுருலுவெவ ஆகிய இரண்டு வலயங்களில் உள்ள 9 மகாவலி பிரிவுகளில் 4,012 பேருக்கு இலவச காணி உறுதிகள் வழங்கப்பட்டன. 47 காணி உறுதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அடையாளமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டின் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. எந்த நாட்டிலாவது பிரதமர் பதவி வேண்டுமா என கையேந்திச் சென்றதுண்டா? 3 நாள்களாகப் பிரதமரை தேடினார்கள். வேறு நாடுகளின் அரசியலில் அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. எந்த நாட்டிலும், ஒரு ஆசனம் மாத்திரம் இருப்பவர் ஜனாதிபதியானதுண்டா? இந்த வீழ்ச்சியடைந்த அரசியல் முறைமையில் இருந்து இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். அரசியலின்றி உழைத்ததால் அந்த வெற்றியைப் பெற முடிந்தது. அதற்குமுன் எங்களுக்குள் பல்வேறு அரசியல் முரண்பாடுகள் இருந்தன.

ஆனால் நாடு வீழ்ச்சியடையும் போது அவ்வாறு செயற்பட முடியாது. அந்த நேரத்தில் நாம் ஒன்றுபடாவிட்டால் அரசியல் செய்ய ஒரு நாடு எஞ்சியிருக்காது. கடந்த இரண்டு வருடங்களாக மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பாடுபட்டோம். இந்த வங்குரோத்தடைந்த நாட்டில் சமுர்த்திக்குப் பதிலாக, மக்களுக்கு மும்மடங்கு நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவியேற்றதன் பின்னர் வழங்கிய சம்பள அதிகரிப்பின் பின்னர் முதன்முறையாக அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. மேலும், விவசாயிகளுக்கு தேவையான அளவு உரத்தை வழங்கி நாட்டின் விவசாயம் முன்னேற்றப்பட்டுள்ளது.

கடந்த பொருளாதார நெருக்கடியால் நாட்டின் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டனர். இப்போது நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ள நிலையில் அவர்களை மறக்க முடியாது. கடந்த காலங்களில் இப்பிரதேச விவசாயிகள் எமக்கு நல்ல அறுவடையை வழங்கியுள்ளனர். அதனால்தான் பொருளாதாரத்தை வலுப்படுத்தி முன்னேற்ற முடிந்தது. அந்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இன்று நிரந்தரக் காணி உரிமை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இது ஒரு புரட்சிகரமான நடவடிக்கையாகும். இதுதான் உண்மையான சோசலிசம். நாம் ஒரு ஜனநாயக சோசலிச நாடு. எனவே, உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். சீனாவும் சோசலிசத்தின்படி பொருளாதாரத்தை முன்னேற்றி மக்களின் கைகளுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தது.

நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளோம். இதன் மூலம் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுகின்றன. இதை விட வேறு சோசலிசமும் புரட்சியும் இல்லை. புரட்சி என்பது மக்களைக் கொல்வதோ, விகாரையில் உள்ள பிக்குமாரை சுட்டுக் கொல்வதோ, வீடுகளை எரிப்பதோ அல்ல. இதுதான் உண்மையான புரட்சி. உறுமய வேலைத்திட்டத்தின் மூலம் இந்நாட்டில் 20 லட்சம் மக்களுக்கு காணி உரிமை கிடைக்கும். மக்கள் இந்த உரிமையைப் பெற்றுக் கொண்டு பெருமையுடன் முன்னேறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுவே உங்கள் விடுதலை. இப்போது நீங்கள் அதிகாரிகளின் பின்னால் செல்லத் தேவையில்லை. எனவே, அரசியல் நோக்கமின்றி இந்தத் திட்டத்தைத் தொடருமாறு அனைவரைக்கும் அழைப்பு விடுக்கிறேன்."– என்றார்.




# ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 116,000 மாணவருக்கு புலமைப் பரிசில்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின்படி பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் "ஜனாதிபதி புலமைப் பரிசில்" திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில் 116,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

க.பொ.த. உயர்தரம் கற்கும் 6 ஆயிரம் மாணவர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டத்திற்காக 824 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தரம் ஒன்று முதல் 11 வரையான ஒரு லட்சம் மாணவர்களுக்கு மாதாந்தம் 3,000 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கவிருப்பதோடு இதற்காக 3 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரிவென மற்றும் பிக்கு கல்வி நிறுவனங்களில் சாதாரண தரம் கற்கும் மாணவருக்கான புலமைப் பரிசில் திட்டத்திற்காக 288 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. க.பொ.த உயர்தரம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பிரிவில் கற்கும் பிக்கு மாணவருக்கான புலமைப்பரிசில் திட்டத்திற்காக 720 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்பு பரிவர்த்தனை ஆணைக்குழுவும் ஜனாதிபதி நிதியமும் இணைந்து இந்த புலமைப் பரிசில்களை வழங்குகின்றன.

இதன்படி தற்போது செயற்படுத்தப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக இந்தத் திட்டத்தில் 5,000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதன்படி, தற்பொழுது க.பொ.த உயர்தர மாணவர் மற்றும் தரம் ஒன்று முதல் 11 வரையான மாணவருக்காக இரு புலமைப்பரிசில் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை மட்டத்தில் புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி நிதியம் ஏற்பாடு செய்துள்ளது. ஒவ்வொரு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. புலமைப் பரிசில் குறித்த விவரங்களை வலயக் கல்வி அலுவலகங்களில் பெற முடியும். எனவே இதுவரை புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்காத பாடசாலைகள் இருக்குமானால் விரைவாக விண்ணப்பிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது.

அதன்படி தற்போது நடைமுறையில் உள்ள மேற்படி இரண்டு புலமைப் பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக பிரிவென மற்றும் பிக்கு கல்வி நிலையங்களின் மாணவர்களுக்கு 5,000 புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

# சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக அஸ்வெசும கடன் வழங்கும் திட்டம்

சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் ஊடாக அஸ்வெசும கடன் திட்டமொன்று இந்த மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இதன்கீழ் தொழில் முயற்சி, விவசாயம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்பவற்றுக்காக விசேட முறைமையின் கீழ் கடன்கள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நலன்புரி திட்டங்கள் ஊடாக மாத்திரம் நாட்டை வளப்படுத்த முடியாது எனவும் சிறந்த உற்பத்திகள் மூலமாகவே நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான நம்பிக்கையை மக்களுக்கு வழங்குவதற்காகவே இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.07.2024

## மேஷம்

தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்று வீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.

## ரிஷபம்

நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நேர்மறையான கண்ணோட்டம் காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக் கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும் போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக் காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதியான போக்கு நல்ல பலன் தரும்.

## கடகம்

பாதுகாப்பின்மை உணர்வு காணப் படும். உங்கள் உணர்வுகளை கட்டுப் படுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில் திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர் மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும்.மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரண மாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற் றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட் டாலும் நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சியடை வீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்க ளிடம் பதற்றம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல் லுறவு காணப்படாது. நேர்மையாக பணியாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக் கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத் தின்போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

உங்களிடம் தேவையற்ற கவலைகள் காணப்படும். இதனால் தலைவலிக்கு ஆளாவீர்கள்.

## துலாம்

இன்று சிறிது மந்தமாக காணப்படு வீர்கள். திட்டமிட்ட முயற்சியும் செயல் களில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக்குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணி யாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிக மாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.

இன்று செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலான தாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந் துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்க ளுக்கு கவலையை அளிக்கும்.

பதற்றம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப் படும். ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங் கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.07.2024




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப் படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ் வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப் படும்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப் படும். எந்த விஷயத்தையும் யதார்த்த மாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர் பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப் படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்கள் தருவதைக் காண்பீர்கள். சமநிலையோடு இருந்தால் சரியான முடிவெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டை உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு அனுகூலமாக இருக்காது. நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று வெற்றி பெறுவதற்கு அமைதியான கட்டுப்பட்ட டான அணுகுமுறை தேவை.

திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் பணியில் தவறுகளை தவிர்க்கலாம். என்றாலும் உங்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள் வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் பாதிக்கும். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்த முடியும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று மோசமான ஆரோக்கியம் காணப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES

KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park